உயர்த்துவது கழக அரசின் பரிசீலனையில் உள்ளதா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதியில் சேத்தியாத்தோப்பு பால் குளிரூட்டும் நிலையத்தின் பால் குளிர்விக்கும் திறன் அளவீடான 10 ஆயிரம் லிட்டர் என்பதை மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் ஆணையின் அடிப்படையிலே 30 ஆயிரம் லிட்டராக அதிகப்படுத்துவதற்கு ஏதுவாக திட்டப் பணிகள் மேற்கொள்ள, ஒன்றிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இக்குளிரூட்டும் நிலையத்தினை முழுத்திறனுடன் தொடர்ந்து நல்ல முறையிலே இயக்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் விழுப்புரம் மாவட்டப் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு ஒன்றியம் மேற்கொண்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. கோவை தங்கம், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர்.

94—

சுற்றுலாத் தலம்

***899—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை பகுதியில் உள்ள புல்மலையை சுற்றுலாத் தலமாக அறிவிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அ. மில்லர், சுற்றுலாத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நான் வணங்கும் தமிழகத்தின் காவல் தெய்வம், தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் பொற்பாதம் வணங்கி என் கன்னிப் பதிலைத் தருகின்றேன்.

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம் வால்பாறை பகுதியில் உள்ள புல்மலை பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியில் உள்ளதால்

2002 ஏப்ரல் 4]

அப்பகுதியைச் சுற்றுலாத் தலமாக அறிவிக்க இயலாது. மேலும் சுற்றுலாத் துறை, எந்த ஒரு இடத்தையும் சுற்றுலாத் தலமாக அறிவிப்பதில்லை. சுற்றுலா முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் அங்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையைக் கருத்திற்கொண்டு, தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவுரைப்படி, நிதி ஆதாரங்களுக்கேற்ப தேவையான அடிப்படை வசதிகள் செய்யப்படுகின்றன.

திரு. கோவை தங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறையில் உள்ள இந்தப் புல்மலை, பார்ப்பதற்கு மிகுந்த அழகு வாய்ந்த இடமாகும். குறிப்பாக, இந்தப் புல்மலையைப் போல் தமிழ்நாட்டில் வேறு எங்கும் இல்லை. அந்த அளவுக்கு ஆள் உயரம் இந்தப் புல்மலை வளர்ந்திருக்கிறது. இந்தப் புல்மலையைச் சுற்றுலா மையமாக அமைத்தால், அங்கே ஏராளமான பொது மக்கள் அதைப் பார்ப்பதற்கு மிகவும் விரும்புகிறார்கள். அந்தப் புல்மலை இயற்கை அழகு வாய்ந்த, மிகவும் நல்ல அற்புதமான இடமாகும். ஸ்விட்சர்லாந்திற்கு அடுத்தபடியான அழகு வாய்ந்தது புல்மலை என்று சொல்லுகிறார்கள். இந்தப் புல்மலையை அரசு சுற்றுலாத் தலமாக அமைத்தால் --- அரசுக்கு மிகுந்த வருமானம் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. நுழைவுக் கட்டணம் வசூல் செய்யலாம். அங்கே வனத் துறையினர் வன விலங்குகளுக்குத் தொல்லைகள் ஏற்படும் என்பதற்காக அந்த இடத்தை மூடி வைத்திருக்கின்றார்கள். ஆனால், அதில் உண்மை இல்லை. புல்மலையைப் பார்க்க மக்கள் ஏராளமாக அந்தப் பகுதிக்கு வந்து திரும்பிச் சென்று கொண்டிருக்கிறார்கள். இப்பொழுது வால்பாறையைப் பொறுத்தவரையில் யானை, சிறுத்தைப் புலி போன்ற வன விலங்குகள் அன்றாடம் எஸ்டேட் பகுதியிலே குடியிருக்கின்ற வீடுகளுக்கு அருகிலே வந்து செல்கின்ற வண்ணம் இருக்கின்றன. ஆகவே, அதைக் காரணம் காட்டி புல்மலையை . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தங்கம், என்ன செய்ய வேண்டும்?

திரு. கோவை தங்கம்: புல்மலையை சுற்றுலாத் தலமாக அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11-10

மாண்புமிகு திரு. அ. மில்லர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டம் வால்பாறை தாலுக்காவில்

வால்பாறையிலிருந்து சுமார் 18 கிலோமீட்டர் தொலைவிலுள்ள இந்திரா காந்தி வன உயிரின உய்விடம் மற்றும் தேசியப் பூங்காவில் வால்பாறை காப்பு வனத்திற்கு உட்பட்ட மேற்குத் தொடர்ச்சி மலையில் அக்காமலைப் பகுதியில் புல்மலை அமைந்துள்ளது. இதன் பரப்பு 3122.50 ஹெக்டேர் ஆகும். இந்தப் பகுதி அரசு ஆணை எண் 58, வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை, நாள் 23-1-1989-ன்படி தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இப்பகுதி பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியாக அறிவிக்கப்பட்டுள்ளது. இப்புல்மலைப் பகுதி வால்பாறை தாலுக்காவில் ஒரு முக்கிய நீர்வளப் பகுதியாகவும், வற்றாத நீரோடைகள் உள்ளதாலும் மனித நடமாட்டத்தினால் ஏற்படும் பாதிப்பு எதுவும் இல்லாத சோலைப் பகுதியாக உள்ளதாலும் இங்கு அரிய வன உயிரினங்களான வரையாடுகள் மற்றும் நமது தேசிய விலங்கான புலி, மான், காட்டு எருமை, சிறுத்தை, யானை போன்ற மிருகங்கள் உள்ளன. மேலும், புல்மலைப் பகுதிக்குச் செல்வதற்குப் போதுமான சாலை வசதி கிடையாது. மேலும் இப்பகுதி அடர்ந்த காடுகளைக் கொண்டதாக உள்ளது. இப்புல்மலைக்கு கால்நடையாக ஒற்றையடிப் பாதையில் சுமார் 10 கிலோமீட்டர் தூரம் செல்லவேண்டும். இப்புல்மலைப் பகுதி கோவை மாவட்டத்திலுள்ள ஒரு முக்கிய நீர்ப்பிடிப்பு மையமாக உள்ளது. மேலும், இப்பகுதியில் வன உயிரினங்கள், குறிப்பாக யானைகள் நடமாட்டம் அதிகமாக உள்ளதாலும், இப்பகுதிக்குச் சென்று வர சாலை வசதிகள் இல்லாத அடர்ந்த காட்டுப் பகுதியாக உள்ளதாலும், தேசியப் பூங்காவாக அரசால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, இப்புல்மலைப் பகுதி பாதுகாக்கப்பட்ட வனப் பகுதியானதால் சுற்றுலாத் தலமாக அறிவிக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்று இந்த அவைக்குக் கூறிக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு:- ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]